சார்பு நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்

**Case No. Mcop.110/2015**

2023ம் ஆண்டு மார்ச் மாதம் 07ம் நாள் செவ்வாய்கிழமை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய எ.ம.சா.2-இல் வாக்குமூலம் ஆக்ட் 10/1873-ம் ஆண்டின் ஏற்பாட்டின்படி திருமதி. சித்ரா கிரேட் 2 பென்ஞ் கிளார்க் என்பவரால் பிரமாணம் செய்யப்பட்டு, திறந்தவெளி நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்னிலையில், நேரடியான கவனத்திலும், கண்காணிப்பிலும் வாய்மொழி சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராமமூர்த்தி | தொழில் | இளநிலை உதவியாளர், வட்டாரபோக்குவரத்துக்கழகம் ஆரணி. |
| கணவர் பெயர் | வெங்கட்ராமன் | ஜாதி | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

**07.03.2023 முதல் விசாரணை**

1. நான் வட்டார போக்குவரத்துக்கழகம் ஆரணியில் இளநிலை உதவியாளராக பணி புரிந்து வருகிறேன். என் அடையாள அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். அடையாள அட்டை நகல் அசல் ஆவணத்துடன் சரி பார்க்கப்பட்டு நகல் **எ.ம.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 06.03.2023 தேதியிட்ட வட்டார போக்குவரத்து அலுவலகர் ஆரணி வழங்கிய அனுமதி கடிதம் **எ.ம.சா.ஆ.3,** 06.03.2023 தேதியிட்ட வட்டார போக்குவரத்துக்கழக அலுவலர் ஆரணி வழங்கிய கார்த்திகேயன் த/பெ செல்வம் என்பவரது ஓட்டுனர் உரிமத்தின் விவரம் ஏதும் இவ்வலுவலகத்தில் வழங்கப்படவில்லை என்று வழங்கப்பட்ட கடிதம் **எ.ம.சா.ஆ.4** தாக்கல் செய்கிறேன்.

2. எ.ம.சா.ஆ.4 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கார்த்திகேயன் த/பெ செல்வம் என்பவரின் குறிப்பிட்ட முகவரியில் அவரது பெயருக்கு ஓட்டுனர் உரிமம் எதுவும் வழங்கப்படவில்லை என்று எங்கள் அலுவலக ஆவணங்களின் பரிசீலனையில் தெரிய வருகிறது.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. விபத்து வாகனமான TSG 3936 என்ற வாகனம் எங்கள் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தான் பதிவு செய்யப்பட்டிருந்தது என்றால் சரியல்ல.

2. விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனம் எங்கள் அலுவலக ஆள்வரைக்குள் விபத்து நடந்திருந்தால் ஆய்விற்காக எங்கள் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு கொண்டு வரப்பட்டிருக்கலாம்.